கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

மூன்றாம் வருட/இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு 2012/2013

(மார்ச்/ஏப்ரல் 2015)

TLS 3203 தெரிவுசெய்யப்பட்ட நூல்கள் III (கி.பி 9ஆம் நூற்றாண்டு வரை)

நேரம்: 03 மணித்தியாலங்கள்

முதலாம் வினாவிற்கும் ஏனையவற்றுள் எவையேனும் மூன்று வினாக்களுக்குமாக மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

LIBRARY
01 JUN 2015
EASTERN UNIVERSITY, SRI LANKA

01. பின்வரும் செய்யுள்களின்

i) பொருளைத் தெளிவாகத் தருக.

ii) அடிக்கோடிட்ட பகுதிகளின் நயத்தைக் காண்க.

அ) வையம் காவலர் வழிமொழிந்து ஒழுகப்
போகம் வேண்டிப் பொதுச்சொல் பொறாது
இடம் சிறிதென்னும் ஊக்கம் துரப்ப
ஒடுங்கா உள்ளத்து ஓம்பா ஈகை
கடந்தடு தானைச் சேரலாதனை
யாங்ஙனம் ஒத்தியோ வீங்குசெலல் மண்டிலம்
பொழுதென வரைதி புறக்கொடுத்து இறுத்தி
மாறிவருதி மலைமறைந்து ஒளித்தி
அகலிரு விசும்பி னானும்
பகல் விளங்குதியால் பல்கதிர் விரித்தே

(08 புள்ளிகள்)

ஆ) கழனி மாஅத்து விளைந்துஉகு தீம்பழம்
பழன வாளை கதூஉம் ஊரன்
எம்இல் பெருமொழிகூறி தம்இல்
கையும் காலும் தூக்கத் தூக்கும்
ஆடிப்பாவை போல
மேவன செய்யும் தன்புதல்வன் தாய்க்கே

(07 புள்ளிகள்)

இ) சுற்றும் ஒளிவட்டம் சூழ்ந்து சோதி பரந்தெங்கும்
எத்தனை செய்யிலும் என்ம மகன்முகம் நேர்ஒவ்வாய்
வித்தகன் வேங்கட வாணன் உன்னை விளிக்கின்ற
கைத்தலம் நோவாமே அம்பு லீ கடிது ஓடிவா

(05 புள்ளிகள்)

ஈ) அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை

நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற் பொருட்டு

(05 புள்ளிக

02. புறநானூற்றுப் பாடல்களில் வேந்தர் புகழ் கூறப்படுமாற்றை உதாரணங்களுட
விளக்குக.
(25 புள்ளிகள்

03. குறுந்தொகைப் பாடல்களில் தலைவியின் துயரம் வெளிப்படுத்தப்படுமாற்
மதிப்பிடுக.
(25 புள்ளிகள்)

04. “சிலப்பதிகாரம் கானல்வரிப் பாடல்களில் காதலனைப் பிரிந்த பெண்ணின் நிலை
சிறப்புறச் சித்திரிக்கப்பட்டுள்ளது” இக்கூற்றினை விளக்குக.

(25 புள்ளிகள்

05. பெரியாழ்வார், தாய் - சேய் உறவுமுறைக்கூடாக கண்ணன்மீது தாம் கொ
பக்தியை வெளிப்படுத்துமாற்றைத் தெளிவுறுத்துக.

(25 புள்ளிகள்)

06. “மனித மேம்பாட்டிற்கு உதவும் கருத்துக்களை திருக்குறள் கொண்டுள்ளது”
பொருட்பால்- ஒழிபியலை அடிப்படையாகக் கொண்டு இக் கூற்றினை
விளக்குக.

(25 புள்ளிக

**************************